UNIVERSITY OF PERADENIYA

பேராதனைப் பல்கலைக்கழகம்

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

தொடர் தொலைக்கல்வி நிலையம்

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2017

பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி) - 2017 டிசெம்பர்

# HINDU CULTURE I / இந்துப்பண்பாடு I (HCG I)

## இந்து சமய வரலாறு - இந்தியா, இலங்கை

## History of Hinduism – India and Sri Lanka

(மூன்று மணித்தியாலம்)

இவ்வினாத்தாளில் எல்லாமாக 08 வினாக்கள் உள்ளன

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

01. சிந்துவெளி நாகரிகம் திராவிடருக்குரிய நாகரிகம் என்பதற்கான ஆதாரங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

02. இருக்குவேத காலச் சமய வழிபாடுகள் பற்றிக் கருத்துரை வழங்குக.

03. இந்துமத வளர்ச்சியில் மௌரியர் காலம் பெறும் முக்கியத்துவம் பற்றி விளக்குக.

04. தமிழகத்தில் பல்லவர் காலத்தில் சைவசமயம் அடைந்த வளர்ச்சியினை விபரிக்குக.

05. ஈழத்தில் ஆரிய சக்கரவர்த்திகள் காலத்துச் சைவசமய வளர்ச்சி பற்றி ஆராய்க.

ம.ப.பா.

06. இலங்கையில் பொலனறுவைக் காலத்தில் இந்துசமயம் பெற்றிருந்த செல்வாக்குப் பற்றி பரிசீலிக்குக.

07. பின்வருவோருள் யாரேனும் ஒருவர் இந்துசமய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை விளக்குக.

i. ஆறுமுகநாவலர்
ii. தயானந்த சரசுவதி
ii. காசிவாசி செந்திநாதையர்
iv. சுவாமி ஞானப்பிரகாசர்

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்குச் சிறுகுறிப்பு வரைக.

i. சைவ வித்தியா விருத்திச்சங்கம்
ii. சாமவேதம்
iii. திருக்கோணேஸ்வரம்
iv. திருமறைக் காடு
v. புருடார்த்தங்கள்

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2017
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2017 டிசெம்பர்

## HINDU CULTURE II / இந்துப்பண்பாடு --II (HCG --II )

**இந்து தத்துவ சிந்தனைகள்**

## Hindu Religious and Philosophic Thoughts

இவ்வினாத்தாளில் எல்லாமாக எட்டு (08) வினாக்கள் உள்ளன

எவையேனும் **ஐந்து** (05) வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

**(மூன்று மணித்தியாலம்)**

---

01. "இந்துத் தத்துவ மூலங்களை உபநிடதங்களிலே காணமுடியும்" - இக் கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

02. இந்து தத்துவ வரலாற்றில் விசிட்டாத்வைதம் பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க.

03. சைவசித்தாந்தம் கூறும் பதியின் இயல்புகளை விளக்குக.

04. சங்கரவேதாந்தம், மாயாவாதம் எனப்படுவதற்கான காரணங்களை எடுத்துரைக்குக.

05. சைவசிந்தாந்த மரபில் பிரமாணங்கள் மூன்றை விளக்குக.

06. சைவசித்தாந்தம் கூறும் ஆணவமலத்தை, திருவருட்பயனை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

ம.ப.பா.

07. ஈழத்தில் சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஆறுமுகநாவலர் அல்லது மு. திருவிளங்கம் ஆற்றிய பங்களிப்பை ஆராய்க.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

i. விஞ்ஞானகலர்

ii. சஞ்சித வினை

iii. சாங்கியம்

iv. சீவன் முக்தர்

v. மெய்கண்டார்

UNIVERSITY OF PERADENIYA

பேராதனைப் பல்கலைக்கழகம்

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

தொடர் தொலைக்கல்வி நிலையம்

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2017

பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2017 டிசெம்பர்

**HINDU CULTURE - III / இந்துப்பண்பாடு - III (HCG III)**

**இந்துக்கலை, கட்டடக்கலை வரலாறு**

**History of Hindu Art and Architecture**

இவ்வினாத்தாளில் எல்லாமாக 09 வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலுமிருந்தும் **ஒவ்வொரு** வினாவையேனும் தெரிவு செய்து

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

**(மூன்று மணித்தியாலம்)**

---

## பகுதி I

01. ஆலயங்கள் இந்துக் கலைகளின் சங்கமமாக விளங்குமாற்றினைத் தெளிவுபடுத்துக.

02. கலிங்கத்து இந்துக் கோயில்கள் மூன்றினைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினைத் தெரிந்து அதன் பொதுவான கட்டடக்கலை அம்சங்களை விளக்குக.

03. இந்துக் கட்டடக்கலை மரபில் குப்தர் காலத்தின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துக.

ம.ப.பா.

## பகுதி II

04. சோழர்காலச் சிற்பக்கலை வளர்ச்சியினை விபரிக்குக.

05. அநுராதபுர காலத்திற்கு உரியனவாகக் கண்டெடுக்கப்பட்டுள்ள சைவசமயம் சார்ந்த வெண்கலப் படிமங்களுள் ஒன்றினைக் கலாவிமர்சனம் செய்க.

06. இந்துப் பண்பாட்டு வரலாற்றில் விஜய நகர நாயக்கர் கால ஓவியங்கள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

## பகுதி III

07. இலங்கையின் இசை வளர்ச்சியில் சைவ ஆலயங்களின் பங்களிப்பைப் பின்வரும் செயற்பாடுகளின் அடிப்படையில் விளக்குக.

1. புராணபடனம்
2. பண்ணிசை
3. கதாகாலாட்சேபம்
4. இசைத்தட்டுக்கள்

08. இலங்கையில் நிகழ்த்தப்படுகின்ற சமயம்சார் கூத்து ஒன்றினைத் தெரிந்து, அதன் சமய, சமூக முக்கியத்துவத்தினைத் தெளிவுபடுத்துக.

09. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1. சிந்துவெளிக்காலக் கலை
2. பல்லவர்-பாண்டியர் காலக் குகைக் கோயில்கள்
3. தேர்ச்சிற்பங்கள்
4. தஞ்சைப் பெருங்கோயில் ஓவியங்கள்
5. தேவரடியார்